Private
E-Sevai
Center
CSC Center
STAR RAINBOW
SERVICES
VADAPALANI
8144337349

# தமிழ் மக்கள் குரல்

tamilmakkalkurall@gmail.com

தினசரி காலை நாளிதழ்

RNI No. : TNTAM24840

உள்ளது உள்ளபடி

KARUNAII TRUST
அன்னை சிறப்பு பள்ளி
Contact :
98413 59935

மலர் 1 | சென்னை | தினசரி | 4 பக்கம் | ஞாயிற்றுக்கிழமை, ஜூன் 09, 2024 | இதழ் 57

## தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர்/படைத்தலைவர், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் முன்னிலையில், சிறப்பாக பணிபுரிந்த 2 டிராபிக் வார்டன்கள் உள்ளிட்ட 100 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை பாராட்டி வெகுமதி மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார்





































சென்னை, 09 ஜூன் 2024: சங்கர் ஜிவால், காவல்துறை தலைமை இயக்குநர், படைத்தலைவர், தமிழ்நாடு அவர்கள், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் சந்தீப் ராய் ரத்தோர், முன்னிலையில், வேப்பேரி காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர காவல்துறையில் சிறப்பாக பணிபுரிந்த 3 காவல் உதவி ஆணையாளர்கள், 12 காவல் ஆய்வாளர்கள், 18 காவல் உதவி ஆய்வாளர்கள், 11 சிறப்பு உதவி ஆய்வாளர்கள், 54 காவல் ஆளிநர்கள் மற்றும் 2 டிராபிக் வார்டன்கள் என மொத்தம் 100 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை நேரில் அழைத்து பாராட்டி வெகுமதி மற்றும் சான்றிதழ்கள் வழங்கினார். கீழ்காணும் காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் சிறப்பான பணிக்காகப் பாராட்டப்பட்டனர்.

கிழக்கு மண்டலம் ஜி-5 தலைமைச் செயலக குடியிருப்பு காவல் நிலைய ஆய்வாளர் முகேஷ் ராவ் தலைமையில், சிறப்பு உதவி ஆய்வாளர் ஆனந்தன், முதல்நிலை காவலர் ஹேமநாதன், காவலர்கள் கார்மேகம், முரளி, ரமேஷ் ஆகியோர் வாகனத் தணிக்கையின்போது, உடல்வலி நிவாரண மாத்திரைகளை சட்டவிரோதமாக வைத்திருந்த 2 நபர்களை கைது செய்து சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

டி-5 மெரினா காவல் நிலைய சிறப்பு உதவி ஆய்வாளர் பாலசுப்ரமணியம், முதல்நிலைக் காவலர் பிரவீன்குமார், காவலர்கள் சங்கர், ராம்குமார் ஆகியோர் வாகன தணிக்கையின்போது, ஆயுதங்களுடன் வாகனங்களில் வந்த குற்றவாளிகளை கைது செய்து சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

ஈ-4 அபிராமபுரம் காவல் நிலைய காவலர் சுரேஷ்கண்ணன் இரவு ரோந்து பணியின்போது திருட்டு குற்றவாளியை கைது செய்தும் சிறப்பாக பணிபுரிந்துள்ளார்.

டி-3 ஐஸ் அவுஸ் காவல் நிலைய காவலர் ராஜா வழிப்பறி வழக்கில் குற்றவாளிக்கு நீதிமன்ற தண்டனை கிடைக்க நீதிமன்ற அலுவல் பணி செய்தும் சிறப்பாக பணிபுரிந்துள்ளார்.

தெற்கு மண்டலம்

ஜெ-9 துரைப்பாக்கம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் கார்த்திக் ராஜா, தலைமைக் காவலர் கார்த்திக்கேயன், முதல்நிலைக் காவலர் மௌலீஸ்வரன் ஆகியோர் 3 குற்றவாளிகளை கைது செய்து, 448 கிலோ கஞ்சா பறிமுதல் செய்து சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

ஆர்-10 எம்.ஜி.ஆர்.நகர் காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் கார்த்திக்கேயன், கனகராஜ், பெண் சிறப்பு உதவி ஆய்வாளர் உஷாமதி, தலைமைக் காவலர் குபேந்திரன் ஆகியோர் கொலை வழக்கு குற்றவாளி கைது செய்தும், மற்றொரு வழக்கில் 5 குற்றவாளிகளை கைது செய்து 11 கிலோ கஞ்சா பறிமுதல் செய்து சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

புனித தோமையர்மலை காவல் மாவட்ட தனிப்படை உதவி ஆய்வாளர் மாதவன், தலைமைக் காவலர் அல்போன்ஸ் வரீத், ஆகியோர் பல்வேறு குற்ற வழக்குகளில் தொடர்புடைய குற்றவாளிகளை கைது செய்து சிறப்பாக சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

வடக்கு மண்டலம்

பி-2 எஸ்பிளனேடு காவல் நிலைய உதவி ஆய்வாளர் பொன்பாண்டியன், சிறப்பு உதவி ஆய்வாளர் மனோகரன், தலைமைக் காவலர் முகமது, முதல்நிலைக் காவலர்கள் நவ்ஷத் பாஷா, சண்முகம், காவலர் சுகுமார் ஆகியோர் வழிப்பறி வழக்கில் சம்பந்தப்பட்ட 4 குற்றவாளிகளை கைது செய்து சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

பி-2 ஓட்டேரி காவல் நிலைய உதவி ஆய்வாளர் வீராசாமி, சிறப்பு உதவி ஆய்வாளர் பாஸ்கரன், பெண் காவலர்கள் பாரதி, ஜோதிமாலா ஆகியோர் 1991 முதல் 2019ம் ஆண்டு வரையிலான நீதிமன்றத்தில் நிலுவையிலிருந்த 218 வழக்குகளை விரைந்து முடித்து சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

மேற்கு மண்டலம்

மேற்கு மண்டல சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் சாந்தி தேவி, உதவி ஆய்வாளர் கோபிநாதன், சிறப்பு உதவி ஆய்வாளர் பாலகிருஷ்ணன், தலைமைக் காவலர்கள் குமரன், உமா ஆகியோர் கம்போடியாவில் பயிற்சி பெற்ற 4 இணையவழி மோசடி குற்றவாளிகளை கைது செய்து சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

வி-6 கொளத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் கலைச்செல்வி, உதவி ஆய்வாளர் ஆறுமுக நயினார், தலைமைக் காவலரகள் பாலாஜி, திரு.சரவணன், காவலர் கோபிநாத் ஆகியோர் இணையவழி மோசடி குற்றவாளிகளை கைது செய்தும் சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

சென்னை பெருநகர போக்குவரத்து காவல்

ஜெ-8 நீலாங்கரை போக்குவரத்து காவல் நிலைய ஆய்வாளர் அசோகன், போக்குவரத்து காவல் உதவி ஆய்வாளர்கள் ரமணாகாந்தி, சசிகுமார், ரமேஷ் பி-3 கோட்டை போக்குவரத்து காவல் நிலைய உதவி ஆய்வாளர்கள் ஜெயபிரகாசம், அண்ணாமலை, டி-1 திருவல்லிக்கேணி போக்குவரத்து சிறப்பு உதவி ஆய்வாளர் விஜயரங்கன், நூருல் ஜமீத், சி-1 பூக்கடை போக்குவரத்து காவல் நிலைய தலைமைக் காவலர் திருநாவுக்கரசு, கார்த்திக்கேயன், ஜி-7 சேத்துப்பட்டு போ.கா.நி., முதல் நிலைக் காவலர்கள் ஆனந்தி ஈ-2 இராயப்பேட்டை போ.கா.நி., ரஹ்மான்கான், சிவகுமார், ஜி-3 கீழ்பாக்கம் போ.கா.நி., காவலர் சத்யா, போக்குவரத்து வார்டன்கள் தீர் மற்றும் ராஜேஜஸ்வரன் ஆகியோர் போக்குவரத்து ஒழுங்குபடுத்தும் பணியை சிறப்பாக மேற்கொண்டுள்ளனர்.

இதே போல, சென்னை பெருநகர காவல், மத்திய குற்றப்பிரிவைச் சேர்ந்த காவல் உதவி ஆணையாளர்கள் சுரேந்திரன், சரண்யா, ராஜசேகரன், காவல் ஆய்வாளர்கள் ஜானி செல்லப்பா, பூமாறன், கலாராணி, மேரி ராணி, ஜெயவனிதா, முருகேஸ்வரி, வீராச்சாமி உதவி ஆய்வாளர்கள் கணேசன், முகமது அன்சார், கார்த்திக்கேய வெங்கடாச்சலபதி, சிறப்பு உதவி ஆய்வாளர் சிவகுமார், தலைமைக் காவலர் சார்லஸ் பிரவுன் ஆகியோர் சிறப்பாக பணிபுரிந்துள்ளனர். மேலும், குற்ற ஆவண காப்பகத்தின் சிறப்பு உதவி ஆய்வாளர் சித்ராதேவி, மோப்பநாய் பிரிவு தலைமைக் காவலர் ஜெகன், ஆயுதப்படையைச் சேர்ந்த தலைமைக் காவலர்கள் கண்ணன், தவமணி, நடராஜன், ஈஸ்வரன், காவலர்கள் கோமதி, பாக்யலஷ்மி, மோட்டார் வாகனப்பிரிவைச் சேர்ந்த, சிறப்பு உதவி ஆய்வாளர்கள் மேகநாதன், கோபிநாத், முதல்நிலைக் காவலர் அரவிந்த், காவல் அருங்காட்சியக பெண் காவலர்கள் நிவேதா, தர்ஷினி, காவல் மருத்துவமனை தலைமைக் காவலர் திருமலை கணேஷ், முதல்நிலை பெண் காவலர் கலா, நவீன கட்டுப்பாட்டறை பெண் காவலர்கள் சுகன்யா, அர்ச்சனா, நுண்ணறிவுப்பிரிவு காவல் ஆய்வாளர் ராஜா, உதவி ஆய்வாளர்கள் சுபாஷ், வெங்கடேசலு, தலைமைக் காவலர் சரவணன், முதல்நிலைக் காவலர் சேர்மதுரை, சென்னை பாதுகாப்பு பிரிவு உதவி ஆய்வாளர்கள் டில்லி, தலைமைக் காவலர்கள் வெங்கடேசன், தனலஷ்மி, நந்தினி மற்றும் முதல்நிலைக் காவலர் கோபி ஆகியோர் சிறப்பாக பணிபுரிந்துள்ளனர்.

தமிழ்நாடு காவல்துறை தலைமை இயக்குநர், படைத்தலைவர் அவர்கள் மேற்படி சிறப்பாக பணிபுரிந்த 100 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களை பாராட்டி தமிழ்நாடு காவல்துறைக்கு பெருமை சேர்க்கும்படி தொடர்ந்து சிறப்பாக பணிபுரியுமாறு அறிவுறுத்தினார்.




PASSPORT | MSME | PAN | AADHAAR
FSSAI | PATTA | LEGALHEIR
2,4 WHEELER INSURANCE
PROPERTY TAX, EB - NAME TRANSFER
STATE AND CENTRAL GOVT
AUTHORISED FRANCHISEE
ALL ONLINE SERVICES
இ-சேவை மையம்
ஸ்டார் ரெயின்போ சர்வீசஸ்
11,SOUTH PERUMAL KOIL STREET, VADAPALANI, CHENNAI - 600 026.
8148231942 / 8144337349
பொது இ-சேவை மையம்

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி



# உலகெங்கும் வசூல் வேட்டையில் மோகன் நடிப்பில் விஜய் ஸ்ரீ ஜி இயக்கியுள்ள 'ஹரா' திரைப்படம்

## ரசிகர்களின் பாராட்டு மழையில் நனையும் 'ஹரா' படக்குழுவினர்

சென்னை, 09 ஜூன் 2024: விஜய் ஸ்ரீ ஜி இயக்கத்தில் கோயம்புத்தூர் எஸ் பி மோகன் ராஜ் தயாரிப்பில் 'வெள்ளி விழா நாயகன்' மோகன் நடிப்பில் ஜூன் 7 (வெள்ளிக்கிழமை) அன்று உலகெங்கும் வெளியாகி உள்ள 'ஹரா', திரையரங்குகளில் மாபெரும் வசூல் வேட்டை நடத்தி வருகிறது.




திரையிட்ட இடங்களில் எல்லாம் திருவிழா போல ரசிகர்கள் கூடி பதினான்கு வருடங்களுக்கு பிறகு அதிரடி ஆக்ஷன் வேடத்தில் நடிகர் மோகன் கொடுத்துள்ள ரீ-என்ட்ரியை கொண்டாடி வருவதோடு, திரைப்படத்தின் உள்ளடக்கத்திற்காகவும் அது கூறும் கருத்துக்காகவும் 'ஹரா' படக்குழுவினரை வெகுவாக பாராட்டி வருகின்றனர்.

'ஹரா' திரைப்படம் தமிழகமெங்கும் 152க்கும் மேற்பட்ட திரையரங்குகளிலும், மலேசியாவில் 330 திரையரங்குகளிலும், மற்றும் ஐரோப்பா, இலங்கை, லண்டன் உள்ளிட்ட இடங்களில் 220 திரையரங்குகளிலும் வெளியாகி நேர்மறை விமர்சனங்களையும் ரசிகர்களின் ஏகோபித்த வரவேற்பையும் பெற்றுள்ளது.

பெண்கள் விரும்பும் நாயகனாக இன்னமும் மோகன் இருப்பதை உறுதி செய்யும் வகையில் 'ஹரா' திரைப்படத்தை காண பெண்கள் அதிக அளவில் திரையரங்குகளுக்கு வருகின்றனர். இன்றைய தலைமுறையை சேர்ந்த இளைஞர்களும் படத்தை வெகுவாக ரசிக்கின்றனர்.

பாடல்களும் பின்னணி இசையும் படத்திற்கு மிகப்பெரிய பக்கபலமாக அமைந்துள்ளன. முதல் முறையாக ஆக்ஷன் ஹீரோவாக மோகன் முத்திரை பதித்துள்ளதால் இனி வரும் படங்களிலும் அவர் இதுபோன்ற பாத்திரங்களில் நடிப்பார் என்று ரசிகர்கள் எதிர்பார்க்கின்றனர்.

'ஹரா' திரைப்படத்தில் மோகன் ஜோடியாக பிரபல மலையாள நடிகை அனுமோல் நடித்துள்ளார். உலகெங்கும் உள்ள மக்கள் பார்க்க வேண்டிய யூனிவர்சல் சப்ஜெக்டாக உருவாகியுள்ள 'ஹரா' திரைப்படத்தில் 'காலங்களில் அவள் வசந்தம்' புகழ் கௌஷிக் மற்றும் 'பவுடர்' நாயகி அனித்ரா நாயர் மற்றொரு ஜோடியாக நடித்துள்ளனர்.

பள்ளியில் படிக்கும் போதிலிருந்தே ஐபிசி சட்டங்களை மாணவர்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதை வலியுறுத்தும் 'ஹரா' திரைப்படத்தை கோயம்புத்தூர் எஸ் பி மோகன் ராஜ் தயாரித்துள்ளார்.

'ஹரா' திரைப்படத்தில் யோகி பாபு, சாருஹாசன், சுரேஷ் மேனன், வனிதா விஜயகுமார், மொட்டை ராஜேந்திரன், சிங்கம்புலி, தீபா, மைம் கோபி, சாம்ஸ் மற்றும் சந்தோஷ் பிரபாகர் உள்ளிட்ட ஏராளமான நடிகர்கள் நடித்துள்ளனர். இசை: ரஷாந்த் அர்வின், ஒளிப்பதிவு: பிரகத் முனியசாமி, மனோ பிரபாகரன், மோகன் குமார், விஜய் ஸ்ரீ ஜி, படத்தொகுப்பு: குணா, சண்டை பயிற்சி: விஜய் ஸ்ரீ ஜி.

# அல்ட்ரா-பிரீமியம் டி விகளுக்கான சாம்சங்கின் 'பிக் டி வி டேஸ்' விற்பனையுடன் ஸ்டேடியத்தை வீட்டிற்கு கொண்டு வாருங்கள்




கோயம்புத்தூர், 09 ஜூன் 2024: இந்தியாவின் மிகப்பெரிய நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங் இன்று தனது பெரிய டி விகளில் அல்ட்ரா-பிரீமியம் நியோ கியூஎல்ஈடி, ஓஎல்ஈடி மற்றும் கிரிஸ்டல் 4கே யூஎச்டி டி வி உள்ளிட்டவற்றில் அற்புதமான சலுகைகளை அறிவித்துள்ளது. டி20 கிரிக்கெட் உலகக் கோப்பைக்காக 'பிக் டி வி டேஸ்' சலுகைகள் அறிமுகப்படுத்தப்பட்டு, ஸ்டேடியத்தை உண்மையிலேயே வீட்டுக்குக் கொண்டு வருவதன் மூலம் பயனர்களின் பொழுதுபோக்கு அனுபவத்தை மேம்படுத்துகிறது.

'பிக் டி வி டேஸ்' நாட்களில் சாம்சங் டிவிகளை வாங்கும் வாடிக்கையாளர்கள், அவர்கள் வாங்கும் டிவியைப் பொறுத்து, ரூ. 89990 மதிப்புள்ள செரிஃப் டிவி அல்லது ரூ. 79990 மதிப்புள்ள சவுண்ட்பாரை இலவசமாகப் பெறுவார்கள். வாடிக்கையாளர்கள் ரூ. 2990 முதல் தொடங்கும் எளிதான இ எம் ஐ விருப்பங்கள் மற்றும் 20% வரையிலான கேஷ்பேக் ஆகியவற்றைப் பெறலாம். இந்த சலுகைகள் Samsung.com, முன்னணி ரீடெய்ல் விற்பனை கடைகள் மற்றும் பல்வேறு ஆன்லைன் தளங்களில் கிடைக்கும், இது நாடு முழுவதும் உள்ள நுகர்வோரின் வசதியை உறுதி செய்யும். ஜூன் 1 முதல் ஜூன் 30, 2024 வரை இச்சலுகைகள் கிடைக்கும். நியோ கியூஎல்ஈடி, ஓஎல்ஈடி மற்றும் கிரிஸ்டல் 4கே யூஎச்டி டி வி வரம்பில் 98"/85"/83"/77"/75" அளவுகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாடல்களில் சலுகைகள் கிடைக்கின்றன.

சாம்சங் செயற்கை நுண்ணறிவின் (ஏ ஐ) மாற்றும் ஆற்றலை வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறைகளை மேம்படுத்தவும், விதிவிலக்கான காட்சி அனுபவங்களை வழங்கவும் வீட்டு பொழுதுபோக்கிற்கு கொண்டு வருகிறது. இந்த தொலைக்காட்சிகள் வீட்டு பொழுதுபோக்கு அனுபவத்தை மறுவரையறை செய்கிறது, அணுகல்தன்மை, நிலைத்தன்மை மற்றும் மேம்பட்ட பாதுகாப்பை ஏ ஐ இன் சக்தியுடன் மாற்றியமைக்கிறது.

"பெரிய திரை அளவுகள் மற்றும் பிரீமியம் காட்சி அனுபவங்களுக்கான வளர்ந்து வரும் தேவையை பூர்த்தி செய்ய எங்கள் 'பிக் டி வி டேஸ்' பிரச்சாரம் டி20 கிரிக்கெட் உலகக் கோப்பையுடன் இணைந்துள்ளது. நியோ கியூஎல்ஈடி, ஓஎல்ஈடி மற்றும் கிரிஸ்டல் 4கே யூஎச்டி டி விகள் உள்ளிட்ட எங்களின் அல்ட்ரா-பிரீமியம் டி விகளை அற்புதமான சலுகைகளுடன் வழங்குவதன் மூலம், ஸ்டேடியத்தின் அதிவேக அனுபவத்தை வாடிக்கையாளர்களின் வீடுகளுக்கு நேரடியாகக் கொண்டு வருவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். எங்களின் அதிநவீன ஏ ஐ-ஆற்றல்கொண்ட தொலைக்காட்சிகள் மூலம், வாடிக்கையாளர்கள் விதிவிலக்கான படத்தரம், அதிவேக ஆடியோ மற்றும் நேர்த்தியான வடிவமைப்புகளை எதிர்பார்க்கலாம். மேலும், ஏ ஐ சேர்க்கையானது, 8கே ஏ ஐ அப்ஸ்கேலிங் மற்றும் ஏ ஐ மோஷன் என்ஹான்சர் புரோ போன்ற அம்சங்களுடன், நுகர்வோருக்கு இணையற்ற கிரிக்கெட் பார்க்கும் அனுபவத்தை வழங்குகிறது" என்று சாம்சங் இந்தியாவின் விஷுவல் டிஸ்ப்ளே பிசினஸ் பிரிவின் மூத்த துணைத் தலைவர் திரு. மோகன்தீப் சிங் அவர்கள் கூறினார்.

இந்த தொலைக்காட்சிகளில் கிடைக்கும் கேமிங், பொழுதுபோக்கு, கல்வி மற்றும் ஃபிட்னஸ் போன்ற பல்வேறு சேவைகளைச் சேர்ப்பதற்காக, இந்திய நுகர்வோருக்கு உள்ளூர்மயமாக்கப்பட்ட ஸ்மார்ட் அனுபவங்களையும் சாம்சங் க்யூரேட் செய்துள்ளது. க்ளவுட் கேமிங் சேவையானது, கன்சோல் அல்லது பிசி இல்லாமல் - பிளக் மற்றும் பிளே மூலம் ஏ ஏ ஏ கேம்களை அனுபவிக்க பயனர்களுக்கு உதவுகிறது. சாம்சங் எஜுகேஷன் ஹப் பயனர்களுக்கு நேரடி வகுப்புகள் மூலம் பெரிய திரையில் கற்றலை அனுபவிக்க உதவுகிறது, உங்கள் குழந்தைகளுக்கான கற்றலை மேலும் ஊடாடும் வகையில் அதிவேகமாக்குகிறது. கூடுதலாக, டி வி கீ கிளவுட் சேவையுடன், வாடிக்கையாளர்களுக்கு இனி செட்-டாப் பாக்ஸ் தேவையில்லை, ஏனெனில் இது கிளவுட் மூலம் நேரடியாக உள்ளடக்கத்தை அனுப்புகிறது. ஸாம்சங் டி வி பிளஸ் ஆனது செய்திகள், திரைப்படங்கள், பொழுதுபோக்கு மற்றும் பலவற்றிற்கான உடனடி அணுகலுடன் 100+ சேனல்களை இலவசமாக வழங்குகிறது.

# தேனாம்பேட்டை சைதாப்பேட்டை இடையே ரூ.621 கோடியில் உயர்மட்ட சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது - தமிழக அரசு

சென்னை, 09 ஜூன் 2024: தேனாம்பேட்டை சைதாப்பேட்டை இடையே ரூ.621 கோடியில் உயர்மட்ட சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது என்று தமிழக அரசு அறிவித்துள்ளது.

கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் நினைவுப்பாறை யையும் இணைக்கும் கடல்சார் பாதசாரிகள் பாலம் விரைவில் பயன்பாட்டிற்கு வரும் என்று அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டிருப்பதாவது:

இதுவரை ரூ.4,984கோடி மதிப்பில் 577 கி.மீ. சாலைகளை நான்கு வழிச்சாலைகளாக அகலப்படுத்துவதற்கு எடுத்துக் கொள்ளபட்டு, ரூ.2,608 கோடி செலவில் 215 கி.மீ. நீளச் சாலைகள் நான்கு வழிச்சாலைகளாக மேம்படுத்தப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டில் உள்ளன. மீதமுள்ள பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

ரூ.2465 கோடி மதிப்பில் 1710 கி.மீ. சாலைகள் இருவழிச்சாலைகளாக மாற்ற பணிகள் எடுக்கப்பட்டு, ரூ.1860 கோடி செலவில் 1407 கி.மீ. பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. கடந்த மூன்று ஆண்டுகளாக, ரூ. 2,006 கோடி மதிப்பில் 1113 தரைப்பாலங்கள் எடுக்கப்பட்டு, ரூ.785 கோடி செலவில் 795 உயர்மட்ட பாலங்களாக மாற்றப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளாக, சாலை ஓடுதள பாதை மேம்பாட்டு திட்டத்தின் கீழ், ரூ. 1,610 கோடி மதிப்பில் 4581 கி.மீ. நீளத்திற்கு பணிகள் எடுக்கப்பட்டு, ரூ.1,353 கோடி செலவில் 4492 கி.மீ. நீள சாலைப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

ரூ.676 கோடி மதிப்பில் 1653 பணிகள் எடுக்கப்பட்டு, ரூ.352 கோடி செலவில் 1,130 சாலை பாதுகாப்புப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கடந்த மூன்று ஆண்டுகளில், 109 புறவழிச்சாலை பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. அவற்றில், 18 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மேலும், அம்பாசமுத்திரம் திருநெல்வேலி மாவட்டம், அரக்கோணம்-இராணிபேட்டை மாவட்டம், அருப்புக்கோட்டை மேற்கு புறவழிச்சாலை- விருதுநகர் மாவட்டம், பவானி (பாகம் -மி) ஈரோடு மாவட்டம் முதலிய 21 நகரங்களில் அதிகரித்துவரும் போக்குவரத்து மற்றும் சாலைகளை அகலப்படுத்துவதற்குப் போதுமான இடம் இல்லாததால் உயர்மட்ட சாலை மேம்பாலங்கள் தேவைப்படுகின்றன.

சென்னை அண்ணா சாலையில், தேனாம்பேட்டை முதல் சைதாப்பேட்டை வரை உள்ள சாலை சந்திப்புகளில் போக்குவரத்து நெரிசல்களால் நிலவும் காலதாமதங்களைத் தவிர்க்கவும் சீரான போக்குவரத்துகள் நடைபெறவும் உதவும் வகையில் ரூ.621 கோடி செலவில் உயர்மட்ட சாலை அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

நீண்ட காலம் நிலுவையில் இருந்த மதுரை மக்களின் கோரிக்கையான மதுரை மாநகரில் ராஜாஜி அரசு மருத்துவமனை சந்திப்பு மற்றும் அப்போலோ மருத்துவமனை சந்திப்பு ஆகிய இடங்களில் மேம்பாலம் அமைக்கும் பணி 2011ல் தொடங்கி எவ்விதமான முன்னேற்றமின்றி இருந்தது. 2023 -24 ம் ஆண்டு இப்பணிகளுக்கான அரசாணை வழங்கப்பட்டு பணிகள் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

மு.க.ஸ்டாலின் அரசு பொறுப்பேற்றபோது 70 ரயில்வே மேம்பாலப் பணிகள் பல்வேறு நிலையில் நடைபெற்று வந்தன,

இதுவரை மூன்றாண்டுகளில் 836 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 22 ரயில்வே மேம்பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டில் உள்ளன. ரெயில் கடவுகள் மூடப்பட்டுள்ளன.

மாநில நிதியின் மூலம் நீண்டகாலமாக நிலுவையில் இருந்த சிக்கண்ணா கல்லூரி (திருப்பூர் மாவட்டம்) அருகே ரெயில்வே மேம்பால கட்டுமான பணிகள் தற்போது துவங்கப்பட்டுள்ளது.

மேலும் பன்னாட்டு நிதி உதவியுடன் நடைபெறும் திட்டங்களில் உள்ள சாலை மற்றும் புறவழிச்சாலைகளில் 12 இரயில்வே மேம்பாலங்களும் நடைபெற்று வருகின்றன.

இவை தவிர அருப்புக்கோட்டை, சிவகங்கை, சங்கரன்கோவில், திண்டுக்கல் நாமக்கல் ஆகிய புறவழிச்சாலைப்பணிகளில் குறுக்கே ரெயில்வே பாதையில் பாலம் கட்ட இரயில்வே துறையினருடன் இணைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. "விபத்தில்லா மாநிலம்" என்ற முதலமைச்சர் கனவை செயல்படுத்த, "பள்ளங்கள் அற்ற சாலை" என்ற இலக்கை எய்திடவும் பொதுமக்களின் துணையோடு கண்டறியப்பட்ட சாலை பள்ளங்களை குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் சரி செய்திடவும் 'நம்ம சாலை கைபேசி செயலி' ஒன்று புதிதாக உருவாக்கப்பட்டுள்ளது. இச்செயலியில் பதிவேற்றம் செய்யப்படும் சாலை பள்ளங்கள் சம்பந்தப்பட்ட களப்பொறியாளர்களுக்கு உடனுக்குடன் மின்னஞ்சல் மூலம் அனுப்பப்படும்.

அதன் அடிப்படையில், நெடுஞ்சாலைத்துறை சாலையில் உள்ள பள்ளங்கள் மாநில நெடுஞ்சாலைகளில் 24 மணி நேரத்திலும் மாவட்ட முக்கிய சாலைகள் மற்றும் மாவட்ட இதர சாலைகளில் 72 மணி நேரத்திலும் சரி செய்யப்படும். மேலும் சரி செய்யப்பட்ட புகைப்படம் உடனுக்குடன் கைப்பேசி செயலியில் பதிவேற்றம் செய்து புகார் தந்தவர்க்கு தெரிவிக்கப்படும்.

இச்செயலி மூலம் 2,129 புகார்கள் மீது தீர்வு காணப்பட்டுள்ளன.

தமிழ்நாடு முழுவதும் நெடுஞ்சாலைகளில் 5 லட்சம் மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சி நடத்த திட்டமிடப்பட்டது. இதுவரை, 2023 -24ம் ஆண்டில், 4,50,000 மரங்கள் நடப்பட்டுள்ளன.

முதலமைச்சரின் கனவுத் திட்டங்களில் ஒன்றான குமரிமுனையில் திருவள்ளுவர் சிலையையும், விவேகானந்தர் நினைவுப்பாறையையும் இணைக்கும் கடல்சார் பாதசாரிகள்பாலம் 37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிவடைந்து திறக்கப்பட்டு மக்கள் பயன்பாட்டிற்கு வரவிருக்கிறது.

ஆறுகளின் குறுக்கே கடந்த மூன்றாண்டுகளில் 277 உயர்மட்டப் பாலங்கள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. 2023 -24ஆம் ஆண்டில் 13 உயர்மட்டப் பாலங்கள் 400 கோடி ரூபாய் மதிப்பீட்டில் எடுத்துக் கொள்ளப்பட்டு பல்வேறு பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

பல்வேறு முன்னேற்றத் திட்டங்களை நடைமுறைப்படுத்தி சாலை வசதிகளில் தமிழ்நாடு முதலிடம் என்பதை நிலைநாட்டி வருகிறார்.

இவ்வாறு அரசு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

"printed by S.MYTHILI and published by S.MYTHILI on behalf of S.MYTHILI and printed at Chennai Offset Printers No.19/1, 21/2, Kitabath Khan Bhandur street, Ellis Road, Chennai-600 002, and published at No.11, South Perumal Koil Street, Vadapalani, Chennai - 600 026 Editor S.MYTHILI"

## டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார் மே 2024 இல் 25,273 யூனிட்களை விற்பனை செய்து 24% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது

சென்னை, 09 ஜூன் 2024: டிகேஎம் மே 2024 மாதத்தில் அதன் வலுவான மற்றும் நிலையான செயல்திறனுடன், 25,273 யூனிட்களின் விற்பனையைப் பதிவு செய்து மாதாந்திர வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது. நிறுவனம் 20,410 யூனிட்களை விற்ற மே 2023 உடன் ஒப்பிடும்போது இது ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி 24% ஆகும். மே மாதத்தில், உள்நாட்டு விற்பனை 23,959 யூனிட்களை எட்டியது, கூடுதலாக 1,314 யூனிட்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன. நிறுவனம் 2024 ஏப்ரல் மாதத்தில் 23% வளர்ச்சியைப் பதிவுசெய்தது, இது 20,494 அலகுகளின் விற்பனையைக் கண்டது.

மேலும், இந்த சாதனை சிஒய் 2024 இன் முதல் ஐந்து மாதங்களில் குறிப்பிடத்தக்க 48% உயர்வைக் குறிக்கிறது, மொத்த விற்பனை 1,22,776 யூனிட்களை எட்டியுள்ளது, இது முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் 82,763 யூனிட்களாக இருந்தது.

வலுவான செயல்திறன் குறித்து கருத்து தெரிவித்த டொயோட்டா கிர்லோஸ்கர் மோட்டார், விற்பனை-சேவை - பயன்படுத்தப்பட்ட கார் வணிகத்தின் துணைத் தலைவர் சபரி மனோகர் கூறுகையில், "2024 மே மாதத்தில் நாங்கள் முந்தைய ஆண்டைவிட 24% வளர்ச்சியைப் பதிவு செய்து இரட்டை இலக்க வளர்ச்சியைத் தொடர்கிறோம். . எங்களின் இடைவிடாத வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்ட அணுகுமுறை, எங்கள் வாடிக்கையாளர்களின் பல்வேறு தேவைகளைப் புரிந்துகொள்வதன் மூலமும், பலதரப்பட்ட தயாரிப்புகள் மற்றும் சேவைகளை வழங்குவதன் மூலமும் வளைவில் முன்னேற எங்களைத் தூண்டியது. தொடுப்புள்ளிகளை மேம்படுத்துவதன் மூலமும், மகிழ்ச்சிகரமான உரிமை அனுபவங்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட புதுமையான மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளை மேம்படுத்துவதன் மூலமும், எங்கள் வாடிக்கையாளர்களை மையமாகக் கொண்டு தொடர்ந்து உற்சாகப்படுத்துவோம்.

எங்களின் வலுவான எஸ்யூவி வரிசையின் புதிய கூடுதலாக, ஆல்-நியூ அர்பன் க்ரூஸர் டெய்ஸர், சந்தையின் மாறும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் டிகே எம்-ன் அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. டைசார்-க்கான மொத்த விற்பனை மற்றும் டெலிவரிகள் தொடங்கியுள்ளன என்பதை அறிவிப்பதில் நாங்கள் மிகவும் மகிழ்ச்சியடைகிறோம். நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் தேவை வருவதால் வாடிக்கையாளரின் கருத்துக்கள் அதிகமாக உள்ளன. பணக்கார டொயோட்டா எஸ்யூவி பாரம்பரியத்தை நிலைநிறுத்தும் நோக்கில், ஆல்-நியூ அர்பன் க்ரூஸர் டைசர், ஸ்டைல், உயர் செயல்திறன், எரிபொருள் சிக்கனம் மற்றும் குறிப்பிடத்தக்க வெளிப்புற வடிவமைப்பு ஆகியவற்றின் கலவையை உள்ளடக்கியது. இது 1.0எல் டர்போ, 1.2எல் பெட்ரோல் மற்றும் ஈ-சிஎன்ஜி ஆகிய மூன்று இன்ஜின் விருப்பங்களில் கிடைக்கிறது. கூடுதலாக, டைசார் புகழ்பெற்ற டொயோட்டாவின் மதிப்பு கூட்டப்பட்ட சேவைகளால் ஆதரிக்கப்படுகிறது, இது இந்திய வாடிக்கையாளர்களை மனதில் கொண்டு சிறப்பாக வடிவமைக்கப்பட்டுள்ளது. எங்களின் மதிப்புமிக்க வாடிக்கையாளர்களை எங்கள் ஷோரூமைப் பார்வையிடவும், புதிய அர்பன் க்ரூஸர் டைசரை அனுபவிக்கவும் இந்த வாய்ப்பைப் பயன்படுத்துகிறேன்.

மேலும், எங்களின் அனைத்து தயாரிப்புகள் மற்றும் சேவைகள் மீது வாடிக்கையாளர்களால் காட்டப்படும் நீடித்த உற்சாகம், எங்கள் தயாரிப்பு மூலோபாயம் மற்றும் எங்களின் ஆழமான சந்தை தொடர்பின் வெற்றியை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மல்டி பேத்வே பவர்ட்ரெய்ன்களைக் கொண்ட எங்கள் பன்முகப்படுத்தப்பட்ட போர்ட்ஃபோலியோ மற்றும் மேம்பட்ட மதிப்பை வழங்கும் வடிவமைக்கப்பட்டுள்ளது எங்கள் வளர்ச்சியில் முன்னணியில் உள்ளது. இன்னோவா கிரிஸ்டா, இன்னோவா ஹைக்ராஸ், ஃபார்ச்சூனர், லெஜெண்டர், அர்பன் க்ரூஸர் ஹைரைடர், ஹிலக்ஸ் மற்றும் எல்சி300 போன்ற மாடல்கள் இந்த கட்டணத்தில் முன்னணியில் உள்ளன. கூடுதலாக, கேம்ரி ஹைபிரிட், கிளான்சா, வெல்ஃபயர் மற்றும் ருமியான் ஆகியவற்றின் வலுவான விற்பனையானது எங்களின் மேல்நோக்கிய பாதையில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளித்துள்ளது.

## டால்மியா பாரத் அறக்கட்டளை தமிழ்நாட்டில் திறன் மேம்பாட்டுத் திட்டங்கள் மூலம் 120 கிராமப்புற பெண்களுக்கு அதிகாரம் அளிக்கிறது

திருச்சி, 09 ஜூன் 2024: கிராமப்புற பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றமாக, டால்மியா பாரத் அறக்கட்டளை (டி பி எஃப்), இந்திய சிறு தொழில்கள் மேம்பாட்டு வங்கியுடன் இணைந்து, பெண்களுக்கான திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவோரை இலக்காகக் கொண்ட ஒரு பயனுள்ள திட்டத்தைத் தொடங்கியுள்ளது. தமிழ்நாட்டில் திருச்சிராப்பள்ளி மற்றும் அரியலூர் மாவட்டங்களில். இந்தத் திட்டமானது பாய் நெசவு, பனை ஓலை கூடை செய்தல் மற்றும் மென்மையான பொம்மைகள் செய்தல் ஆகியவற்றில் குறிப்பிட்ட வர்த்தகத் திறன்களைக் கொண்ட 120 கிராமப்புற பெண்களுக்கு பயிற்சி மற்றும் அவர்களின் சொந்த குறுந்தொழில்களை உருவாக்குவதற்கு உதவி செய்யும். கிராமப்புறங்களில், கல்வியின்மை மற்றும் குறைந்த வேலை வாய்ப்புகள் மற்றும் மோசமான உள்கட்டமைப்பு போன்ற பல்வேறு சமூக-பொருளாதார காரணிகளால் பெண்களுக்கு வருமானம் அரிதாகிறது . இந்த முயற்சியானது உள்நாட்டில் அணுகக்கூடிய திறன் பயிற்சியை வழங்குவதை நோக்கமாகக் கொண்டது மட்டுமல்லாமல் பயனாளிகளுக்கு நிலையான வாழ்வாதார வாய்ப்புகளிலும் கவனம் செலுத்துகிறது. கடந்த நான்கு மாதங்களாக, திருச்சிராப்பள்ளி மாவட்டம் புள்ளம்பாடி தொகுதியிலும், அரியலூர் மாவட்டம் அரியலூர் தொகுதியிலும் மூன்று பயிலரங்குகள் நடத்தப்பட்டு, புள்ளம்பாடி தொகுதியில் 25 பெண்களுக்கான பாய் நெய்தல் நிகழ்ச்சி ஜூன் 30 ஆம் தேதி நிறைவடைகிறது. தொடக்கப் பயிற்சியை மனிதவளத் தலைவர் திரு.பிரகாஷ், டிசிபிஎல் லாஜிஸ்டிக்ஸ் தலைவர் பி.என்.சுரேஷ் ஆகியோர் சிறப்பித்தனர். இந்த முயற்சி குறித்து டிசிபிஎல் நிர்வாக இயக்குநர் திரு. விநாயகமூர்த்தி கருத்து தெரிவிக்கையில், "டால்மியா பாரத், கிராமப்புற சமூகங்களை மேம்படுத்துவதற்கும், எங்கள் செயல்பாடுகளின் பிராந்தியங்களில் நிலையான வளர்ச்சியை உறுதி செய்வதற்கும் நாங்கள் உறுதிபூண்டுள்ளோம். கிராமப்புற அமைப்புகளில் உள்ள பெண்கள் வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளை அணுகுவதில் குறிப்பிடத்தக்க சவால்களை எதிர்கொள்கின்றனர் மற்றும் பெரும்பாலும் குடும்பத்திற்குள் அல்லது விவசாயம் சார்ந்த வேலைகளில் பாரம்பரிய வழிமுறைகளில் தள்ளப்படுகிறார்கள்.. எங்கள் திறன் பயிற்சி திட்டங்கள் மூலம், இந்த பெண்களுக்கு நிதி சுதந்திரத்தை அடைய தேவையான கருவிகள் மற்றும் வாய்ப்புகளை வழங்குவதையும் அவர்களின் சமூகங்களுக்கு அர்த்தமுள்ள பங்களிப்பை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளோம். இந்த முயற்சிக்கு ஆதரவளித்த சிட்பிக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம்.

இந்த முயற்சிகளின் நீண்டகால வெற்றி மற்றும் வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்த, டிபிஎஃப் ஒரு விரிவான ஆதரவு தொடர்ந்து செயல்படுத்தியுள்ளது. வருமானப் பதிவேடுகள் மூலம் வருமானத்தை உன்னிப்பாகக் கண்காணித்தல், ஆன்லைன் மார்க்கெட்டிங் தளங்களை எளிதாக்குதல், வால்மார்ட் குழுவின் ஆதரவுடன் ஆன்லைன் மார்க்கெட்டிங் குறித்த பயிற்சி அளிப்பது, வணிகத் துவக்கத்திற்கான நிதி இணைப்புகளை நிறுவுதல் மற்றும் நிறுவன நடவடிக்கைகளுக்கு நிதி பங்களிப்புகளை வழங்குதல் ஆகியவை இதில் அடங்கும்.

டால்மியா பாரத் அறக்கட்டளை கிராமப்புற மேம்பாட்டில் கவனம் செலுத்தி சமூக மேம்பாட்டை முன்னெடுத்துச் செல்கிறது. விவசாயம், விவசாயம் அல்லாத, திறன் மேம்பாடு மற்றும் பல்வேறு வாழ்வாதார வழிகளில் இலக்கு பயிற்சி மூலம், டிபிஎஃப் பெண்கள், விவசாயிகள் மற்றும் இளைஞர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது, அவர்களின் திறன்கள் மற்றும் திறன்களை வாழ்வாதாரத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது.

## நாடாளுமன்ற தேர்தலில் அ.தி.மு.க. வாக்கு சதவிகிதம் அதிகரித்துள்ளது 2026 சட்டமன்ற தேர்தலிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை: எடப்பாடி பழனிசாமி பேட்டி ஓ.பி.எஸ், சசிகலா முடிந்து போன கதை




சென்னை, 09 ஜூன் 2024: 2026 சட்டமன்ற தேர்தலிலும் பா.ஜ.க.வுடன் கூட்டணி இல்லை என்று அண்ணா தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற தேர்தலில் அண்ணா தி.மு.க. வாக்கு சதவிகிதம் அதிகரித்துள்ளது என்று அவர் கூறினார். ஓ.பி.எஸ், சசிகலா முடிந்து போன கதை. இதுபற்றி பேசி பிரயோஜனம் இல்லை என்றும் அவர் கூறினார்.

சேலத்தில் இன்று (சனிக்கிழமை) தேர்தல் தோல்வி குறித்து முதல்முறையாக செய்தியாளர்களைச் சந்தித்து பேசிய எடப்பாடி பழனிசாமி கூறியதாவது:

"தேர்தல் பிரச்சாரத்தை பொறுத்த வரை பிரதமர் மோடி 8 முறை தமிழகம் வந்து பா.ஜ.க. கூட்டணிக்கு பிரச்சாரம் செய்தார். உள்துறை அமைச்சர் அமித்ஷா, பா.ஜ.க. தலைவர் ஜே.பி.நட்டா, மத்திய அமைச்சர்கள் பலர் தமிழகத்தில் பிரச்சாரம் செய்தனர். பா.ஜ.க. கூட்டணியில் அங்கம் வகிக்கின்ற பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் உள்ளிட்டோர் பிரச்சாரம் செய்தனர்.

தி.மு.க. கூட்டணியில் முதல்வர் ஸ்டாலின், உதயநிதி ஆகியோர் தமிழகம் முழுவதும் அவர்களது கூட்டணியை ஆதரித்து பிரச்சாரம் செய்தார்கள். அவர்களுக்கு ஆதரவாக ராகுல் காந்தி 'ரோடு ஷோ' மேற்கொண்டார். திருமாவளவன் உள்ளிட்ட கூட்டணி கட்சிகளும் பிரச்சாரம் செய்தன.

ஆனால், அண்ணா தி.மு.க. சார்பில் நான் ஒருவன் தான் எங்களது கூட்டணியை ஆதரித்து பிரச்சாரம் செய்தேன். தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா பிரச்சாரம் செய்தார். தேர்தலில் அண்ணா தி.மு.க.வின் கூட்டணி பலம் உள்ளிட்டவை குறித்து அவதூறு பிரச்சாரங்கள் அதிகமாக வெளியிடப்பட்டன. மக்களை குழப்பும் விதமாக தேர்தல் உத்திகளை எதிரிகள் கையாண்டார்கள். இவ்வளவுக்கும் இடையேயும் அண்ணா தி.மு.க. இந்த தேர்தலை சந்தித்து 2019 தேர்தலில் பெற்ற வாக்குகளை விட ஒரு சதவீதம் கூடுதலான வாக்குகளை பெற்றுள்ளது. இது அண்ணா தி.மு.க.வுக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக பார்க்கிறேன்.

இன்றைக்கு வாக்கு சதவீதத்தை வைத்து பா.ஜ.க. வளர்ந்துவிட்டதாக சொல்கிறார்கள். 2014ல் பா.ஜ.க. கூட்டணி வைத்து போட்டியிட்டது. அப்போது பா.ஜ.க. கூட்டணி 18.80 சதவீத வாக்குகள் பெற்றது. 2024ல் பா.ஜ.க. கூட்டணி பெற்ற வாக்குகள் 18.28 சதவீதம். 0.62 சதவீதம் வாக்குகள் குறைவாக தான் பெற்றுள்ளது. ஆக, பா.ஜ.க. கூட்டணி அதிக வாக்குகளை பெற்றதாக தவறான செய்திகள் வெளியிடப்படுகின்றன.

தி.மு.க, 2019ல் 33.52% வாக்குகள் பெற்றது. ஆனால் தற்போதைய தேர்தலில் 26.93% வாக்குகளே பெற்றது. 2019ல் வாக்குகளை விட இந்த தேர்தலில் தி.மு.க.வின் வாக்கு சதவீதம் குறைந்துள்ளது. இந்த இரண்டு கட்சிகளையும் ஒப்பிடும்போது அண்ணா தி.மு.க.வே அதிக வாக்குகளைப் பெற்றுள்ளது.

தென்மாவட்டங்களில் அண்ணா தி.மு.க வலுப்பெறும். இது நாடாளுமன்றத் தேர்தல். சட்டமன்ற தேர்தல் வேறு, நாடாளுமன்ற தேர்தல் வேறு. மக்கள் பிரித்து பார்த்து தான் வாக்களிக்கிறார்கள். தமிழக மக்கள் விழிப்புணர்வு உள்ளவர்கள். எந்த தேர்தலுக்கு எப்படி வாக்களிக்க வேண்டும் என அவர்களுக்கு தெரியும்.

அண்ணா தி.மு.க, வளர்ந்துதான் வருகிறது. ஒரு சில தொகுதிகளில் பின்னடைவு உள்ளது. அதை சரி செய்யப்படும். தேர்தலில் கூட்டணி இருந்திருந்தால், அமைந்திருந்தால் என்று பேச முடியாது. ஒவ்வொரு தேர்தலிலும் மாறுபட்ட கூட்டணிகள் இருக்கும். சூழ்நிலைக்கு தக்கவாறு வெற்றி, தோல்வி அமையும்.

சசிகலா, ஓபிஎஸ் முடிந்துபோன கதை. இனிமேல் அவர்களை பற்றி பேசி என்ன பிரயோஜனம்? முடிந்துபோனவற்றை பேச வேண்டிய அவசியம் இல்லை. வேண்டுமென்றே திட்டமிட்டு எதிரியோடு சேர்ந்து குழப்பத்தை தொடர்ந்து விளைவிக்கிறார்கள். அவர்கள் பிரிந்து சென்றதால் தான் அண்ணா தி.மு.க.வுக்கு ஒரு சதவீதம் வாக்கு கூடுதலாக கிடைத்துள்ளது.

அண்ணா தி.மு.க.வில் பிளவு இல்லை. அண்ணா தி.மு.க.வை பற்றி பேச அண்ணாமலைக்கும், சட்டத்துறை அமைச்சர் ரகுபதிக்கும் அருகதை இல்லை. ரகுபதிக்கு அடையாளம் கொடுத்தது அண்ணா தி.மு.க, தான். அதன்பின்பு அவர் தி.மு.க, சென்றார்.

பா.ஜ.க, கூட்டணி இருந்து இருந்தால் வென்று இருப்போம் என முடிந்து போனதை பற்றி இப்போது பேசக்கூடாது. தேர்தலுக்கு முன் அண்ணாமலை பல்வேறு கனவுகளை கண்டு இருப்பார். அவரது கனவு பலிக்காததால் விரக்தியில் கடுமையாக விமர்சிக்கிறார். கடந்த முறை பெற்ற ஓட்டுகளை விட பா.ஜ.க, குறைவான ஓட்டுகளை மட்டுமே பெற்றுள்ளது. தமிழகத்தில் உள்ளதை போல, பல மாநிலங்களிலும் நிர்வாகிகள் உள்ளதால், பா.ஜ.க.வுக்கு பின்னடைவு ஏற்பட்டுள்ளது. பா.ஜ.க, உடன் கூட்டணி இல்லை என்ற நிலைப்பாட்டில் மாற்றம் இல்லை.

வேலுமணிக்கும் எனக்கும் பிரச்னை இருப்பது போல் வேண்டுமென்றே திட்டமிட்டு குழப்பத்தை ஏற்படுத்துகிறார்கள். 2026ல் அண்ணா தி.மு.க., கூட்டணி ஆட்சியை பிடிக்கும்; அண்ணா தி.மு.க., தனி பெரும்பான்மையை பெறும். அண்ணா தி.மு.க,வை அழித்துவிடுவோம் என பல காலமாக சொல்லிக் கொண்டு உள்ளனர். ஆட்சி அதிகாரம் வேண்டும் என்றால், என்றோ தேசிய கட்சியோடு சேர்ந்து இருப்போம். வெற்றி பெறும் வரை தேசிய கட்சிகள் நம்மை பயன்படுத்துகின்றன. பிறகு கண்டுகொள்வதில்லை. இவ்வாறு அவர் கூறினார்.

தமிழ் குரல் மக்கள்
உள்ளது உள்ளபடி
ஞாயிற்றுக்கிழமை,
ஜூன் 09, 2024

# நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி: மோடிக்கு எலான் மஸ்க் வாழ்த்து

*சென்னை, 09 ஜூன் 2024:* நாடாளுமன்ற தேர்தலில் வெற்றி பெற்றதற்காக மோடிக்கு எலான் மஸ்க் வாழ்த்து தெரிவித்துள்ளார்.



இந்தியாவில் நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவை தேர்தலில் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி வெற்றி பெற்றதையடுத்து, தொடர்ந்து 3-வது முறை இந்தியாவின் பிரதமராக மோடி பதவியேற்க உள்ளார்.

இந்த நிலையில் 3-வது முறை பிரதமராக பதவியேற்கப்போகும் மோடிக்கு, உலக பணக்காரர்களில் ஒருவரும், டெஸ்லா, எக்ஸ் உள்ளிட்ட நிறுவனங்களின் தலைவருமான எலான் மஸ்க் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக 'எக்ஸ்' தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில், "உலகின் மிகப்பெரிய ஜனநாயக தேர்தலில் வெற்றி பெற்ற நரேந்திர மோடிக்கு வாழ்த்துகள். இந்தியாவில் எனது நிறுவனங்கள் உற்சாகமான பணிகளை செய்வதை நான் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.

முன்னதாக எலான் மஸ்க் கடந்த ஏப்ரல் மாதம் இந்தியாவுக்கு வர திட்டமிட்டு இருந்தார்.

இந்தியாவில் டெஸ்லா நிறுவனத்தின் முதலீடு மற்றும் 'ஸ்டார் லிங்' திட்டம் குறித்த அறிவிப்புகளை எலான் மஸ்க் வெளியிடுவார் என எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் அவரது பயணம் திடீரென ஒத்திவைக்கப்பட்டது. மேலும் இந்த ஆண்டின் இறுதியில் எலான் மஸ்க் இந்தியாவிற்கு வருகை தருவார் என்றும் தகவல் வெளியானது குறிப்பிடத்தக்கது.

# உனை நினைத்து பெருமை சகோதரா: பவன் கல்யான் வெற்றிக்கு கமல் வாழ்த்து

*சென்னை, 09 ஜூன் 2024:* ஆந்திர சட்டமன்ற தேர்தலில் அபார வெற்றி பெற்று, எதிர்க்கட்சி தகுதி பெற்ற பவன் கல்யானுக்கு கமல்ஹாசன் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

2014ம் ஆண்டு ஜனசேனா என்ற கட்சியை தொடங்கிய பவன் கல்யாண், 2019 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆந்திரப் பிரதேச சட்டமன்ற தேர்தலில் 140 இடங்களில் போட்டியிட்டார். ஆனால், இவரது கட்சி ஒரு இடத்தில் மட்டுமே வெற்றிபெற்றது. அந்த தேர்தலில் பவன் இரண்டு தொகுதிகளில் போட்டியிட்டு தோல்வியடைந்தார்.



இந்தநிலையில், பவன் கல்யாணின் ஜன சேனா கட்சி கடந்த தேர்தலில் தெலுங்கு தேசத்துடன் கைகோர்த்தது. அதன் பிறகு தெலுங்கு தேசம் கட்சி பாஜகவுடன் சேர்ந்தது. 2024 இல் தேர்தலை சந்தித்த இந்த கட்சிகள், ஆந்திராவில் அமோக வெற்றி பெற்றது. ஜனசேனா கட்சி 21 சட்டமன்றத் தொகுதிகளிலும், 2 மக்களவை தொகுதிகளிலும் போட்டியிட்டு அனைத்து இடங்களிலும் வெற்றிபெற்றது. மேலும், பிதாரபுரம் தொகுதியில் போட்டியிட்ட பவன் கல்யாணும் பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றார்.

இந்தநிலையில், 2024 ஆந்திர சட்டமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற பவன் கல்யாணுக்கு, நடிகரும், மக்கள் நீதி மய்யத்தின் தலைவருமான கமல்ஹாசன் தனது எக்ஸ் பக்கத்தில் வாழ்த்துகளை தெரிவித்துள்ளார்.

அதில், ' உணர்ச்சிப்பூர்வமான உரையாடலை நடத்தி ஆந்திரப் பிரதேச சட்டமன்ற தேர்தலில் வெற்றிபெற்ற பவன் கல்யாணுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவித்து கொள்கிறேன். ஆந்திரப் பிரதேச மக்களின் நம்பிக்கைகள் மற்றும் அவர்களுக்கு சேவை செய்யும் இந்தப் பயணத்தை அவர் தொடங்கும் வேளையில் அவருக்கு நான் வாழ்த்துக்களைத் தெரிவித்து கொள்கிறேன். உன்னை நினைத்து பெருமை கொள்கிறேன் சகோதரா!' என கமல் வாழ்த்தியுள்ளார்.

பவன் கல்யாணின் மூத்த சகோதரரும், தெலுங்கு திரையுலகின் சூப்பர் ஸ்டாருமான சிரஞ்சீவி கடந்த 2008ம் ஆண்டு 'பிரஜா ராஜ்யம்' என்ற பெயரிலான கட்சியை உருவாக்கினார். அந்த கட்சியில் இளைஞர் பிரிவான 'யுவராஜ்யம்' க்கு பவன் கல்யான் தலைவராக்கப்பட்டார். அதன்பிறகு, 2011ம் ஆண்டு சிரஞ்சீவி தனது கட்சியை காங்கிரஸுடன் இணைத்துவிட்டார். தனது சகோதரரின் இந்த முடிவுக்கு எதிர்ப்பு தெரிவித்து பவன் கல்யாண் வெளியேறினார்.

இதை தொடர்ந்து, கடந்த 2014ம் ஆண்டு பவன் கல்யாண் தனது சொந்த கட்சியை உருவாக்கி அதற்கு ஜனசேனா என்று பெயர் வைத்தார். கடந்த 10 ஆண்டுகளாக ஜன சேனா கட்சியை வழிநடத்தி, தற்போது 2024 இல் தனது கட்சியை எதிர்க்கட்சி என்ற அளவிற்கு உயர்த்தியுள்ளார்.

# ஏஐ மூலம் இயங்கும் அம்சங்களுடன் கூடிய ஒடிசி ஓஎல்ஈடி, வியூபினிடி மற்றும் ஸ்மார்ட் மானிட்டர்கள் அடங்கிய 2024 ஆம் ஆண்டிற்கான தொகுப்புகளை சாம்சங் இந்தியா வெளியிட்டுள்ளது

*சென்னை, 09 ஜூன் 2024:* இந்தியாவின் மிகப்பெரிய எலக்ட்ரானிக்ஸ் பிராண்டான சாம்சங், அதன் 2024 வரிசையான ஒடிசி ஓஎல்ஈடி கேமிங் மானிட்டர், ஸ்மார்ட் மானிட்டர்கள் மற்றும் வியூபினிடி மானிட்டர்களை அடுத்த நிலை அனுபவங்கள் மற்றும் புதிய ஏஐ திறன்கள் 1 உள்ள அம்சங்களுடன் இன்று வெளியிட்டது. ஒடிசி ஓஎல்ஈடி ஜி6, மற்றும் ஸ்மார்ட் மானிட்டர் வரிசை அதிக மேம்பட்ட பொழுதுபோக்கு அம்சங்களுடன் மகிழ்ச்சியை உயர்த்துகிறது, அதே நேரத்தில் ஏஐ மற்றும் வியூபினிடி வரிசையில் இயக்கப்படும் ஸ்மார்ட் மானிட்டர் எம்8 முழுமையான பணிநிலையத்தை உருவாக்க இணைப்பை அதிகரிக்கிறது.




ஒடிசி ஓஎல்ஈடி கேமிங் மானிட்டர், வியூபினிடி மற்றும் ஸ்மார்ட் மானிட்டர் அறிமுகத்தின் மூலம், நுகர்வோருக்கு சிறந்த அனுபவங்களைத் வழங்க விரும்புகிறோம். அற்புதமான ஏஐ தொழில்நுட்பங்கள் மற்றும் பல சாதன அனுபவத்தால் இயக்கப்படுகிறது, ஒடிசி ஓஎல்ஈடி கேமிங் மானிட்டர் மற்றும் ஸ்மார்ட் மானிட்டர்கள் முறையே காட்சி சிறப்பையும் படைப்பாற்றலையும் மறுவரையறை செய்யும். உலகின் முதல் தனியுரிம பர்ன்-இன் பாதுகாப்பு தொழில்நுட்பமான ஓஎல்ஈடி சேப்கார்ட்+ உடன் பொருத்தப்பட்ட ஓஎல்ஈடி கேமிங் மானிட்டர், பல்ஸேட்டிங் ஹீட் பைப்பைப் பயன்படுத்துவதன் மூலம் இமேஜ் பர்னிங்கைத் தடுக்கிறது" என்று சாம்சங் இந்தியாவின் நுகர்வோர் எலக்ட்ரானிக்ஸ் நிறுவன வணிகத்தின் துணைத் தலைவர் திரு புனீத் சேத்தி அவர்கள் கூறினார்.

ஒடிசி ஓஎல்ஈடி வரிசைகள் : புதிய பர்ன்-இன் தடுப்பு அம்சங்களுடன் கூடிய அற்புதக் காட்சி

ஒடிசி ஓஎல்ஈடி ஜி6 என்பது 27" கியூ எச் டி (2560 ஜ் 1440) தெளிவுத்திறன் கொண்ட மானிட்டர், இது 16:9 விகிதத்தை ஆதரிக்கிறது. அதன் 360எச் இசட் புதுப்பிப்பு வீதம் மற்றும் 0.03எம் எஸ் ஜி டி ஜி மறுமொழி நேரம் ஆகியவை கேமர்கள் வேகமாக நகரும் கேம்ப்ளேவைத் தொடர்வதை எளிதாக்குகிறது.

புதிய ஒடிசி ஓஎல்ஈடி மாடலில் சாம்சங் ஓஎல்ஈடி சேப்கார்ட்+ உள்ளது, இது ஒரு புதிய தனியுரிம பர்ன்-இன் பாதுகாப்பு தொழில்நுட்பமாகும். மானிட்டரில் பல்ஸேட்டிங் ஹீட் பைப்பைப் பயன்படுத்துவதன் மூலம் பர்ன்-இன்னைத் தடுக்கும் இந்த தொழில்நுட்பம் உலகில் முதல் முறையாக அறிமுகம் செய்யப்படுகிறது. கூடுதலாக, டைனமிக் கூலிங் சிஸ்டம், பழைய கிராஃபைட் தாள் முறையை விட ஐந்து மடங்கு அதிக திறன் கொண்ட வெப்பத்தைப் பரப்புவதற்கு குளிரூட்டியை ஆவியாக்கி ஒடுக்குகிறது, இது மையத்தில் வெப்பநிலையைக் குறைப்பதன் மூலம் எரிவதைத் தடுக்கிறது. லோகோக்கள் மற்றும் பணிப்பட்டிகள் போன்ற நிலையான படங்களையும் மானிட்டர் கண்டறிந்து, அவற்றின் பிரகாசத்தை தானாகக் குறைத்து, எரிக்கப்படுவதைத் தடுப்பதற்கான மற்றொரு வழியை வழங்குகிறது 2.

ஒடிசி ஓஎல்ஈடி ஜி6 ஆனது 250 நிட்ஸ் (வகை.) பிரகாசத்துடன் ஒப்பிடமுடியாத ஓஎல்ஈடி படத் தரத்தை வழங்குகிறது, அதே நேரத்தில் ஃபிரீஸிங்க் பிரிமியம் புரோ ஜி பி யு மற்றும் டிஸ்ப்ளே பேனலை ஒத்திசைத்து, தொய்வு, திரை தாமதம் மற்றும் திரை கிழிப்பு ஆகியவற்றை நீக்குகிறது.

சாம்சங்கின் புதிய ஓஎல்ஈடி கிளார் ஃபிரீ டெக்னாலஜி 3, வண்ணத் துல்லியத்தைப் பாதுகாக்கிறது மற்றும் பகல் நேரத்திலும் கூட, ஆழ்ந்து பார்க்கும் அனுபவத்தை உறுதி செய்வதற்காக, படத்தைக் கூர்மையாக வைத்திருக்கும் போது, பிரதிபலிப்புகளைக் குறைக்கிறது. ஓஎல்ஈடி-உகந்த, குறைந்த-பிரதிபலிப்பு பூச்சு ஒரு புதிய, சிறப்பு கடின-பூச்சு அடுக்கு மற்றும் மேற்பரப்பு பூச்சு வடிவம் காரணமாக பளபளப்பு மற்றும் பிரதிபலிப்பு இடையே முறியடிக்கப்பட்டது.

மானிட்டர் சூப்பர் ஸ்லிம் மெட்டல் வடிவமைப்பைக் கொண்டுள்ளது, அது ஒரு தனித்துவமான அடையாளத்தை அளிக்கிறது, அதே நேரத்தில் கோர் லைட்டிங் + திரையுடன் ஒத்திசைக்கும் சுற்றுப்புற விளக்குகளுடன் பொழுதுபோக்கு மற்றும் கேமிங் அனுபவங்களை மேம்படுத்துகிறது. பணிச்சூழலியல் நிலைப்பாடு, சரிசெய்யக்கூடிய உயரம் மற்றும் சாய்வு மற்றும் சுழல் ஆதரவுடன் நீண்ட அமர்வுகளை மிகவும் வசதியாக ஆக்குகிறது.

புதிய ஒடிசி ஓஎல்ஈடி மானிட்டர் சாம்சங்கின் ஓஎல்ஈடி மானிட்டர் சந்தைத் தலைமையை விரிவுபடுத்துவதற்கான அடுத்த நுழைவு ஆகும். முதல் ஓஎல்ஈடி மானிட்டர்4 ஐ அறிமுகப்படுத்திய ஒரே வருடத்திற்குள் ஓஎல்ஈடி மானிட்டர் சந்தையில் உலகளாவிய விற்பனையில் சாம்சங் முதல் இடத்தைப் பெற்ற பிறகு ஓஎல்ஈடி மானிட்டர் வெளியிடப்பட்டது. இந்த சாதனையானது ஓஎல்ஈடி மானிட்டர்களின் போட்டி நிலப்பரப்பில் சாம்சங்கின் விரைவான உயர்வை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது, அதே நேரத்தில் நிறுவனத்தின் தனியுரிம ஓஎல்ஈடி தொழில்நுட்பத்தை மேம்படுத்தும் மாடல்களுடன் அதன் கேமிங் மானிட்டர் வரிசையை பல்வகைப்படுத்துவதற்கான அதன் உறுதிப்பாட்டை வலுப்படுத்துகிறது.

# மேக்னிஜியோ மெத்தை அறிமுகத்தின் மூலம் சுற்றுச்சூழல் நிலைப்புத் தன்மைக்கு பங்களிப்பை வழங்கும் மேக்னிஃபிளெக்ஸ் இந்தியா நிறுவனம்

*சென்னை, 07 ஜூன் 2024:* உலக சுற்றுச்சூழல் தின அனுசரிப்பையொட்டி லக்ஸரி மெத்தை பிராண்டான மேக்னிஃபிளெக்ஸ், மேக்னிஜியோ என்ற பெயரில் ஒரு புதிய தயாரிப்பு மெத்தையை அறிமுகம் செய்திருக்கிறது. சுற்றுச்சூழல் சார்ந்த நிலைப்புத்தன்மைக்கு முன்னுரிமை தரும் அதே நேரத்தில் மிக உயர்ந்த சௌகரியத்தையும் இது வழங்குகிறது. உலகளவில் வெப்பநிலைகள் அதிகரிப்பது மற்றும் சுற்றுச்சூழல் சீர்கேடு வேகமாக நிகழ்ந்து வருவது என்று இதற்கு முன்பு கண்டிராத மிகப்பெரிய சவால்களை எதிர்கொள்ளும் நமது பூமி கிரகம், மிக சிக்கலான சூழலில் தற்போது இருக்கிறது. மேக்னிஜியோ மெத்தை அறிமுகத்தின் மூலம் அதிக நீட்டிப்புத்தன்மையுள்ள இலக்கை நோக்கிய பயணத்தில் மேக்னிபிளெக்ஸ் இந்தியா நிறுவனத்திற்கு இதுவொரு முக்கிய தருணமாகும். மேக்னிஜியோ மெத்தை ஒவ்வொன்றும் வாங்கப்படும்போது, அதை வாங்கும் வாடிக்கையாளரின் சார்பாக ஒரு மரக்கன்றை நடும் ஒரு உத்திரவாதமான ஒரு வாக்குறுதியையும் மேக்னிபிளெக்ஸ் வழங்குகிறது. வாடிக்கையாளரின் பெயரில் அல்லது அவரது நியமனதாரரின் பெயரில் இதற்கான ஒரு சான்றிதழையும் இந்நிறுவனம் வழங்கும். மேக்னிபிளெக்ஸ் இந்தியா நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் திரு, ஆனந்த் நிச்சானி, இந்நிறுவனத்தின் புத்தம் புதிய தயாரிப்பு குறித்து கூறியதாவது: "காலநிலை மாற்றம் என்பது, நீண்டகாலம் கழித்து நிகழப்போகும் ஒரு அச்சுறுத்தல் அல்ல; இந்த தருணத்தில் நிகழ்ந்து கொண்டிருக்கும் ஒரு யதார்த்த நிலை. எனவே, நமது விருப்பத்தேர்வுகளை மறுஆய்வு செய்யுமாறும் மற்றும் நிலைப்புத்தன்மையுள்ள வாழ்க்கை முறையை விரும்பி செயல்படுத்தவும் இது நமக்கு வலுவான அறைகூவலை விடுக்கிறது. இது குறித்து அதிகரித்து வரும் விழிப்புணர்வானது, நுகர்வோர்களின் நடத்தையில் ஒரு மாற்றம் ஏற்படுவதற்கு வழிவகுத்திருக்கிறது. அவர்களது சுற்றுச்சூழல் அக்கறை சார்ந்த மதிப்பீடுகளுக்கு இணக்கமான தயாரிப்புகளை நுகர்வோர்கள் இப்போது விரும்பி தேடி வாங்குகின்ற நிலைமை உருவாகியிருக்கிறது. ஆகவே, சௌகரியத்திற்கான தேவையைப் பூர்த்தி செய்யும் அதே வேளையில், சுற்றுச்சூழலுக்கான பொறுப்புறுதியையும் நிறைவேற்றுகின்ற ஒரு மிகச்சிறந்த தயாரிப்பான இதனை நாங்கள் உருவாக்கியிருக்கிறோம். அதிக நிலைப்புத்தன்மையுள்ள எதிர்காலத்தை உருவாக்குவதற்காக ஐக்கிய நாடுகள் சங்கத்தால் நிர்ணயிக்கப்பட்ட 17 நிலைப்புத்தன்மையுள்ள வளர்ச்சி இலக்குகள் என்ற குறிக்கோளை செயல்படுத்துவது மீது நாங்கள் தீவிர முனைப்புடன் செயலாற்றுகிறோம். நம் அனைவருக்கும் அதிக நிலைப்புத்தன்மையுள்ள எதிர்காலத்தை கட்டமைப்பதற்கு எமது சிறந்த பங்களிப்பே மேக்னிஜியோ மெத்தை."



மேக்னிஜியோ மெத்தைகள், தீங்கு விளைவிக்கும் விரிவாகக்கூடிய வேதிப்பொருட்கள் இல்லாத மறுஉருவாக்கம் செய்யப்பட்ட ஃபோம்களிலிருந்து தயாரிக்கப்படுகின்றன. முதுகுத்தண்டு அமைப்பிற்கேற்ற உறுதியான ஆதரவை இவைகள் தருகின்றன, உடலின் வடிவமைப்பிற்கு ஏற்றவாறு நெகிழ்வுத்திறனைத் தருவதற்கு மெமோஃபார்ம் பேடிங் உதவுகிறது. சுவாசிக்கக்கூடிய இதன் ஃபைபர்கள் சௌகரியத்தை அதிகமாக்கும் நிலையில் இதில் இடம்பெறும் "நோ வேஸ்ட்" துணியானது, மிருதுவான, மென்மையான தொடுதலை உறுதி செய்கிறது. சுற்றுச்சூழல் சார்ந்த மற்றும் சமூக நலன் சார்ந்த பொறுப்பு மீது மேக்னிஜியோ கொண்டிருக்கும் கடப்பாடு, இது பெற்றிருக்கும் ஓஈகேஓ-டெக்ஸ் ஸ்டேண்டர்ட் 100 மற்றும் ஓஈகேஓ-டெக்ஸ் ஸ்டெப் சான்றிதழ்களில் வலுவாக வெளிப்படுகிறது. தீங்கு விளைவிக்கும் மூலப்பொருட்கள் இல்லாததற்கும் மற்றும் பொறுப்புறுதியுடன் கூடிய தயாரிப்பு நடைமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதற்கும் இது உத்திரவாதம் அளிக்கிறது. இதற்கும் மேலாக, இந்நிறுவனத்தின் புதுமையான வேக்குவம் பேக்கேஜிங் தொழில்நுட்பம், போக்குவரத்தின்போது உமிழ்வுகள் ஏற்படுவதை குறைக்கிறது; ஆராய்ச்சி மற்றும் மேம்பாடு மீது இந்நிறுவனம் கொண்டிருக்கும் பொறுப்புறுதியோ, தயாரிப்பு பொருளின் செயல்திறனையும் மற்றும் குறைந்தபட்சம் பத்து ஆண்டுகள் ஆயுள் காலத்தையும் உறுதி செய்கிறது. இதன்மூலம் ஆதாரவள நிலைப்புத்தன்மைக்கு பங்களிப்பை இது வழங்குகிறது. மேக்னிஜியோ மெத்தைகள், மேக்னிஃபிளெக்ஸ் நிறுவனத்தின் ஸ்டோர்கள் அனைத்திலும் மற்றும் அதன் வலைதளத்திலும் கிடைக்கின்றன. மேக்னிஜியோ மெத்தையை வாங்கி சௌகரியத்தை அனுபவிப்பதற்கு சிரமமில்லாத, எளிதான சமமாத தவணை திட்டமான மேக்னிஃபிளெக்ஸ் இன்வெஸ்ட்மென்ட் பிளான் என்பதனை வாடிக்கையாளர்கள் பயன்படுத்தி பயனடையலாம்.